**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

**நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2017/2018 (ஆகஸ்ட் 2020)**

# FAS 4143 Popular Art

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

**பகுதி – I இலிருந்து இரண்டு வினாக்களுக்கும் பகுதி – II இலிருந்து மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி – I

01. 1. பிரபல்யக் கலை (Popular Art) என்றால் என்ன?

(05 புள்ளிகள்)

2. ஒரு கலை வடிவத்தைப் பிரபல்யப்படுத்துவதில் எவ்வாறான உத்திகள் பயன்படுத்தப்படுகின்றன.

(09 புள்ளிகள்)

02. 1. சமகால கலை வெளியில் புதிய அழகியல் முறைமையை வெளிப்படுத்தி ரசிகர்களை நிலைமாற்றுவதற்கு (Transform) கையாளும் உத்திகள் யாவை?

(06 புள்ளிகள்)

2. மரீனா ஆவ்ரமோவிகின் (Marina Atramovic) படைப்பாக்க ஆற்றுகை முறையினை ஆராய்க.

(08 புள்ளிகள்)

03. 1. பாரம்பரியக் கூத்துக்கலை மக்கள் மத்தியில் சமகாலம் வரையும் நிலைத்து நிற்பதற்கான காரணங்கள் 10 தருக.

(05 புள்ளிகள்)

2. இதன் திறந்தவெளி ஆற்றுகை முறையின் நுட்பமுறையை ஆராய்க.

(09 புள்ளிகள்)

## பகுதி – II

04. மேனிலையாக்கத்தின் காரணமாக தமிழர் மத்தியில் தம்மைப் பிரபல்யமடையச் செய்வதற்கு கையாளப்படும் பரதநாட்டியமும், கர்நாடக சங்கீதமும் எவ்வாறான திட்டமிடல்களையும், உத்திகளையும் பயன்படுத்துகின்றன என்பதனை எடுத்துக்காட்டுகளுடன் ஆராய்க.

(24 புள்ளிகள்)

05. கலைகளை பிரபல்யப்படுத்துவதற்கு தொழிநுட்ப ஊடகங்கள் ஆற்றுகின்ற வகிபாகத்தைக் குறிப்பிட்டு, அதன் நடுநிலையை மதிப்பிடுக.

(24 புள்ளிகள்)

06. "தேசிய கலை உருவாக்கம் அடிப்புற மக்கள் கலை பண்பாட்டு வெளியில் நடைமுறைப்படுத்தப்படும்போது அந்நியமாகின்றது" இக்கூற்றினை எடுத்துக்காட்டுக்களுடன் விவாதிக்குக.

(24 புள்ளிகள்)

07. சிற்பம் அல்லது ஓவியம் பிரபல்யக் கலைவடிவமாவதற்கு எவ்வாறான அழகியற் கூறுகள் தீர்மானிக்கின்றன? உமது பங்குகொள் அனுபவத்துடன் கருத்துரைக்குக.

(24 புள்ளிகள்)